# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2020.10.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தம்)

***(135 ஆம் அத்தியாயமான) குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்)***
***கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*தொழில் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00***　　　**தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (135 ஆம் அத்தியாயமான) குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தோட்டங்களில் தொழிலுக்கு அமர்த்தப்படத்தக்க சிறுவர்களின் வயதை அதிகரிப்பதற்குமாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது மாதாந்த அரிசிப் படியினை வழங்குவது தொடர்பில் எவரேனும் தொழில்தருநரின் பொறுப்பை நீடிப்பதற்கும் ஆகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குறைந்தபட்ச வேதனங்களின் வீதக் கொடுப்பனவு தொடர்பில் எவரேனும் தொழில்தருநரின் பொறுப்பை நீடிப்பதற்கும் ஆகும்.*

## குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தம்)

*ச.வ.-ஒ. 34/2018*

### *(135 ஆம் அத்தியாயமான) குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*1.* இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

*2.* (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (135 ஆம் அத்தியாயமான) குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, ''பதினான்கு வயதுக்குக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதுக்குக்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. *135 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''பதினான்கு வயதுக்குக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதுக்குக்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில் ''பதினான்கு வயதுக்குக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதுக்குக்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*4.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, ''குறைந்தபட்ச வேதன வீதங்கள்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''பதினைந்து வயதுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.